ISSN:2582-9599



38

# பெரிய புராணத்தில் வாழ்வியல்

**ஜெ. வசந்த குமாரி**
**முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**சைவ சித்தாந்தத் துறை, பல்கலைக்கழகம், சென்னை.**

**முன்னுரை:**

தெய்வச் சேக்கிழார் அருளிச் செய்துள்ள பெரிய புராணம் , சைவ அடியவர்தம் பெருமையை உலகுக்கு பறைச் சாற்றிக் கொண்டுள்ளது. பெரிய புராணம் என்னும் திருத்தொண்டர் புராணம் , தொண்டர்களின் வாழ்வைச் சொல்வது போல நமக்கெல்லாம் வாழ்வியலை எடுத்து இயம்புகின்ற வாழ்வியல் நூலாக அமைந்துள்ளது.

பெரிய புராணத்தில் , அடியார்களும் அவர்தம் துணைவியாரும் இறைவன் மீதள்ள பேரன்பால் புரிந்த செயல்களை இருவகைகளாகப் பிரிக்கலாம் அவை

(1) மென்த் தொண்டு

(2) வன்த் தொண்டு

தொண்டர்களின் வரலாற்றை கூறும் காப்பியமாக விளங்குவதால் , சேக்கிழார் பெருமான் இந்நூலுக்கு திருத்தொண்டர் புராணம் எனப் பெயரிட்டுள்ளார்.

பெரியபுராணத்தில், சேக்கிழார் பெருமான், தொண்டர் பண்பையே முதன்மைப்படுத்தி, தொண்டு என்ற பண்புக்கே காப்பியத் தலைமை அளித்துள்ளார். அத்தகைய தொண்டை மேற்கொண்டவர்களுக்கத் ‘திருக்கூட்டம்’ எனப் பட்டமளித்துள்ளார். இத்தகைய பண்ணைப் பற்றிய விளக்கமே ‘திருக்கூட்ட சிறப்பு’ என்ற தலைப்பில் பாடப்பட்டுள்ளது.

‘தொண்டு என்ற பண்பின் வரலாறுதான் பெரியபுராணம்’[1]

பெரிய புராணத்தின் பாவிகம் என கருதப்படுவது தொண்டு என்ற பண்பாகும். ‘பாவிகம் என்பது காம்பியப் பண்பு’[2] பெரிய புராணத்தில் பக்தி சுவை மிகந்துள்ளபடியால் , இதன் பாவிகம் பக்தி என கருதுபவர்களம் உண்டு. ஆனால் , உண்மையில், **தொண்டு** மற்றும் **குறிக்கோள் வாழ்க்கை** என்ற உளவியல் பண்புகளே இதன் பாவிகம் ஆகும்.

பெரிய புராணத்தின் மூல நூலாகிய ‘திருத்தொண்டதொகை’ பாடிய சுந்தரரும் “அப்பாலும் அடி சார்ந்தார் அடியார்க்கும் அடியேன் ”[3] எனப் பாடுகிறார். இங்கு , ‘அப்பாலும்’ என்ற சொல்லின் மூலம் காலம், நாடு போன்ற பரிமாணங்களை கடந்த தொண்டர்கள் என்றுக் கூறுகிறார்.

தொண்டுள்ளம் கொண்டு , தனக்கென வாழாமல் சமூக அக்கறைக் கொண்ட தொண்டர்கள் உலகம் முழுவதும் , எக்காலத்திலும் வாழ்ந்துள்ளனர். இவ்வாறு பல்வேறு காலங்களில் , பல்வேறு இடங்களில், பல்வேறு பணிகளில் இருந்த , தொண்டர்களின் சிறப்பியல்புகளை திருக்கூட்டச் சிறப்பு விளக்குகிறது.

திருக்கூட்டத்தாரின் சிறப்பியல்புகளை தொகுத்து கூறும் சேக்கிழார் , தொண்டு என்ற பண்பை

வலியுறுத்திக் கூறும்போது அதற்கு வேண்டிய தலையாய பண்புகளாக சிலவற்றைப் பட்டியலிடுகிறார்.

திருக்கூட்டம் சிறப்பில் விவரித்துக் கூறப்படும் பண்புகள் அனைத்தும் , தனி மனித மற்றும் சமுதாய வாழ்வியலுக்கு அடிப்படையான , உளவியல் கூறுகளாகும். அவற்றை உற்று நோக்குங்கால் , தொண்டர்களின் வீரம் புலப்படும். தொண்டர்களின் ஆளுமைத் திறன் குறித்தும் அவர்களின் தலைமைப் பண்புக் குறித்தும் இவ்வாறு கூறுகிறார்.

"அகில லோகமும் ஆளற்கு உரியர்" -4

அவர்களின் அஞ்சா செஞ்சந்தத்தை விளக்குங்கால்

"பூதம் ஐந்து நிலையிற் கலங்கினும்

மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்" - 5

என்று உரைக்கின்றார். அஞ்சாமை பண்பு ஆளுமைத் திறமை தலையாயப் பண்பாக எடுத்துரைக்கப்படுகிறது.

"கோதிலாத குணப் பெருங்குன்றனார்" - 6

குற்றமற்ற நற்குணங்களின் உரைவிடமாகவும் இத் தொடர்கள் விளங்குகின்றனர்.

தொண்டர்களின் சிறப்பியல்பாக கூறவரும் இத்தகைய தலைமை பண்பு மற்றும் அஞ்சாமை குறித்து திருவள்ளுவர் திருமூலரும் அழுந்தக் கூறுகின்றனர்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் அஞ்சாமைப் பற்றி இவ்வாறு விளக்குகிறார்.

"அஞ்சாமை, ஈகை, அறிவூக்கம் இந்நான்கும்

எஞ்சாமை வேந்தர்க் இயல்பு - 7

இக்குறளில், தலைப் பண்பாகக் கூறப்பட்டுள்ள நான்கில், அதாவது அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் முதன்மையாக கூறியுள்ள தலைமைப் பண்பு "அஞ்சாமை".

'அஞ்சாமை' என்ற தலைமைப் பண்பை நாவுகரசர் பாடும் போது

அஞ்சுவது யாதொன்றும் இல்லை'

அஞ்ச வருவதும் இல்லை - 8

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் ' -9

இதனை அடுத்து , தொண்டர்கள் சமூக சிந்தனை உடையவர்கள். பிறர் துன்பம் காண சகிக்காதவர்கள். இத்தகைய உயர்ந்த பண்பினை சேக்கிழார் அவர்கள்

"அரந்தை தீர்க்கும் அடியவர்" -10

அரந்தை என்பது துன்பத்தைக் குறிக்கும். எனவே, மற்றவர்களின் துன்பத்தை நீக்கவல்லவர்கள் தொண்டர்கள்.

பிறர் துன்பம் பொருக்காத பண்பினை திருக்கூட்டச் சிறப்பில் மட்டுமின்றி, பெருபான்மையான அடியவர்களின் வரலாற்றை விளக்கும் பெரிய புராண கதை மாந்தர்களின் பண்பாகவும் விளக்கப்பட்டுள்ளது. உதாரணமாக,

திருஞான சம்பந்தர் மயிலை கதிரேசன் செட்டியாரின் துயர் துடைக்க , அவரது மகள் பூம்பாவையை உயிர்பெற செய்தது , திருவீழிமிழலையில் பஞ்சத் தீரும்வரை உணவளித்தது போன்றவற்றை கூறலாம்.

அதேபோல் சுந்தரர், அவிநாசியில் முதலை விபங்கின பாலகனை உயிர்ப்பித்தும், தன் கண்முன்

பிறர் துன்பம் பொருக்கமாட்டத பண்பின் வெளிப்பாடு ஆகும்.

திருநாவுக்கரசர், அரவம் தீண்டி உயிர் நீத்த அப்பூதிய மகனை எழுப்பியதும், அரந்தை தீர்க்கும் அடியவர் என உணர்த்தும்.

தொண்டர்களின் சமூக நோக்கு, அதாவது தன்னலம் கருதாது பிறர் நலம் பேணும் குணத்திதை சேக்கிழ்ர்

“கைத்திருத் தொண்டுசெய் கடப்பாடினார்” -11

என்றும் பாடுகிறார். பொருளுதவி மட்டுமே அரந்தை போக்கும் தொண்டு அல்ல. உடலை வருத்தி செய்யும் தொண்டினை, திருக்கூட்டச் சிறப்பில் கூறுகிறார்.

இதனை அடுத்து , தொண்டு புரியும் அடியவர்களின் மன நிலை குறித்து சேக்கிழார் விரிவாக விளக்குகிறார். சமூக ஏற்ற தாழ்வுகள் பார்க்காது , பொருளாதார நிலைக் குறித்து வித்தியாசம் காட்டாது. சமநிலை மனபாங்கு உள்ளவர்களாக தொண்டர்கள் விளங்கினார்கள். என்பதை

“கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார் -12

என்ற வரிகளின் மூலம் உணர்த்தியுள்ளார்.

ஓடு என்பது வறுமையைக் குறிக்கும். செம்பொன் என்பது செல்வத்தைக் குறிக்கும். மண் ஓட்டையும், செபம் பொன்னையும் சமமாக நோக்கும் மனப்பாங்கு உடையவர்கள் தொண்டர்கள் எனக் கூறுமிடத்து அவர்களின் உயர்ந்த பண்பினை உலகிற்கு எடுத்து இயம்புகிறார்.

ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார் - 13

பெரியபுராணத்தில், சேக்கிழார் காட்டும் உயரிய பண்புகள் , உளவியல் நெறிகள் என கருதப்படுகிறது. இந்த பெரிய புராணம் , தமிழர் மரபு வாழ்வியலை தொண்டு , அன்பு, வீரம், பக்தி மற்றும் சமய அனுபவம் ஆகியவற்றை உயரின பண்புகளாகவும் , குறிக்கோள் வாழ்க்கை என்பதை அடிநாதமாகவும் கொண்டு எவ்வாறு இறைநிலை எய்தினர் என்பதை படம்பிடித்துக் காட்டுகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த பண்புகளைய உடையவர்கள் சமுதாய நலனில் அக்கறை காட்டாமல், காடுகளில் துறவிகளாக வாழ்ந்த வரலாறுகளும் , உண்டு. ஆனால் , சேக்கிழாரோ தொண்டர் என்று எடுத்துக் கொண்டால் , அதற்குரிய தகுதியாக “ஈரஅன்பை” பெற்றிருக்க வேண்டும் என்கிறார். ஈர அன்பு என்பது மக்களிடத்தில் காட்டப்படும் அன்பேயாகும். உயிர்கள் இடத்தில் ஈர அன்பு காட்டி , அவ்வுயிர்கட்கு தொண்டு செய்வதில் தன்னுயிரையும் இழக்க துணிதல் வீரர்களின் செயல் எனக் கூறுகிறார்.

தொண்டையும், அன்பையும் இன்றியமையாத இலக்கணங்களாகக் கொண்டு அடியார்களின் வரலாற்றை பாடிய பெரிய புராணம் மட்டுமின்றி, திருமூலமும் இவ்வாறு பாடுகிறார்.

“படமாடக் கோயில் பகவற்கொன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கென்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்க ஃதாமே” – 14

இதன் மூலம் , சைவ சித்தார்ந்த மெய்ப்பொருளியியலில் சமூகத் தொண்டின் மேன்மையினை உணரமுடிகிறது. தொண்டின் இன்றியாமையைப் பாடிய திருமூலர், அன்பு தான் கடவுள் என அழுந்தக்

கூறுகிறார்.

அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆகும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரு அறிந்தபின்
அள்கே சிவமாய் அமர்ந்திருந்தாரே - 15

இத்தகைய அன்பின் வெளிபாடு எத்தகைய தன்மையுடையது என்பதையும் பெரியபுராணம் வாழ்வியலாக கூறுகிறது.

இறைநிலை அடைவதையே குறிக்கோளாக கொண்டு வாழ்ந்த அடியவர்களை வீரர் என சேக்கிழார் விளிக்கின்றார். ஏனெனில் , சேக்கிழார் பெருமானார் அடியார்களை வெறும் பக்தர்களாக மட்டும் பார்க்கவில்லை.

அறிவியல் மற்றும் உளவியல் நோக்கில் அடியார்களின் மனநிலை மற்றும் செயற்கரிய செயல்களை செய்ய தூண்டிய தருணம் , இறைவனிடத்தில் கொண்டிருந்த தீவிர பக்தி , அவர்களின் சமய அனுபவம் போன்றவற்றை ஆராய்நது பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

பெரிய புராணத்தில் பேசப்படும் அடியார்களை வெறும் பக்தர்கள் என்ற குறுகிய வட்டத்தில் பார்க்க முடியாது. தெய்வ புலவர் வள்ளுவரின் வாக்கான மெய்ப்பொருள் காண்பது அறிவு ”16 “எனும் குறளுக்கு “ஏற்ப, மெய்ப் பொருளை நாடிச் செல்பவர்கள் பெரியபுராணத்து அடியார்கள். அத்தகைய மெய்ப்பொருளை உணரவைக்க சமய அனுபவம் ஒரு கருவியாக செயல்பட்டுள்ளது.

சேக்கிழார்பிரான் பாடியுள்ள் அடியார்களின் சமய அனுபவம் தனித் தன்மையுடையது. சமய அனுபவம் கைவரப் பெற்ற அடியார்களின் வாழ்க்கை கறிக்கோள் மெய்ப்பொருள் குறித்து அமைந்து விடுகிறது. அதாவது, தாம் யார்? இந்த உலகத்திற்கும், பிற உயிர்களுக்கும், தமக்கும் உள்ள தொடர்பு என்ன? பிறப்பின் பயன் யாது ? போன்ற அரிய கேள்விகளுக்க விடைகாண இத்தகைய சமய அனுபவம் பெரிதும் உதவுகிறது.

சமய அனுபவம் வாய்ந்த அடியார்களின் குறிக்கோள், உலக பார்வை மாறியதால், அவர்களின் எண்ணம், செயல், நடத்தை அனைத்தும் பழைய நிலையிலிருந்து மேம்பட்டு நிற்கிறது.

சமய அனுபவம், அடியார்களின் மனநிலை (Attitude), உணர்வுகள் (Emotions), நம்பிக்கைகள் (Belief systems), மதிப்பீடுகள் (Values), அதன் காரணமாக விளையும் நடத்தைகள் (Behaviour) போன்ற அனைத்திலும் வியக்கத்தகு மாற்றத்தினை (Transformation) கொண்டு வருகிறது.

பெரிய புராணம் பல கோணங்களில் உளவியலையும் , வாழ்வியலையும் விளக்கினாலும், சமய அனுபவத்தின் வாயிலாகப் பெறப்படும் உலகப் பார்வை (Perception) கைமாறு எதிர்பார்க்காது செய்யும் தொண்டு, சமநிலை மனப்பாங்கு (Equality) சாதி, இனம், குலம் என வேறுபடுத்திபார்க்காத (Discrimination) தன்மை, இவற்றிற்கெல்லாம் மேலாக சமய அனுபவம் கைவரப் பெற்ற அடியார்களின் பொருளாதார நிலை அதாவது அரசனும் , ஆண்டியும் தகுதிப் பெறவதக்கவர்கள் என எடுத்துரைக்கும் பாங்கு இதன் வாயிலாக சேக்கிழார் பெருமான் கூறும் உளவியலும் , வாழ்வியலும் போற்றுதலுக்குரியது.

உளவியல் அடிப்படையில் சமய அனுபவத்தை உற்று நோக்கில் [17] (Observation) ஒவ்வொரு அடியார்க்கும், ஒவ்வொரு விதத்தில் சைய அனுபவம் வெளிபட்டுள்ளது. எனவே , சமய அனுபவம்

தனித்தன்மை வாய்ந்ததாகவும், சிக்கல் நிறைந்த ஒன்றாகவும் வெளிகாட்டியுள்ளது.

சைவ சமய அடியார்களின் ஆளுமை சமய அனுபவத்தின் அடிப்படையிலும் மிக அதிகமாக தெய்வ சேக்கிழார் விளக்குகிறார். உதாரணத்திற்கு தேவாரம் பாடிய மூவர்களான திருஞான சம்பந்தர் , திருநாவுக்கரசர்,சம்பந்தரிடம் கூட சமய அனுபவமும் அதன் மூலம் வெவ்வேறு வகையான ஆளுமைகளையும் காணமுடிகிறது. இத்தகைய போற்றுதலுக்கரிய சமய அனுபவங்களில் வேறுபாடுகள் உண்டு. ஆனால் , உயர்வு, தாழ்வு என பார்க்கப்படவில்லை. இவ்வனுபவங்களும் , ஆளுகைகளும், ஒன்றுக்கொன்ற மாறுபட்டவை என்பதை ஏற்றுக் கொண்ட சைவ சித்தாந்தம், இதனை நான்கு வகையான மார்க்கம் எனப் பிரித்து தாச மார்க்கம், சத்புத்தர மார்க்கம், சக மார்க்கம் மற்றும் சன் மார்க்கம் என்றனர்.

இங்கு மார்க்கம் எனக் கூறப்படும் வழிமுறைகளை தான் வெவ்வேறானது. ஆனால் , குறிக்கோள் ஒன்றாக மெய்ப்பொருள் அறிவதேயாகும். இதன் அடிப்படையில் சைவ நாற்பதங்களாக நால்வகை நெறிகள் கூறப்பட்டு அவற்றை சைவர்கள் சிவ புண்ணியங்களாக கருதி கொண்டாடி வருகின்றனர். அவை;

**சைவ நாற்பதங்கள்**

1. சரியை - தாசமார்க்கம்
2. கிரியை - சற்புத்திர மார்க்கம்
3. யோகம் - சகமார்க்கம்
4. ஞானம் - சன்மார்க்கம்

1. “சரியை எனப்படும் முதல்படியில் , அன்பினால் செய்யும் உடல் தொண்டு மற்றும் இறைபணிகள் அனைத்தும் தொகுக்கப்பட்டுள்ளன.

திருநாவுக்கரசர் சரியை நெறியை பின்பற்றி இறைவனை வழிபட்டார் எனப்படுகிறது. அப்பூதியடிகளும் சரியை வழிநின்று இறை நிலையடைந்தார் என பெரியபுராணம்[18] கூறுகிறது.

2. கிரியை கிரியை இரண்டாவது படிநிலையாகக் கொள்ளப்படுகிறது. அகச் செயல்பாடுகளான மந்திரங்கள் ஓதுதல் , பதிகம் பாடுதல் , அகத்திலும் புறத்திலும் ஆகமச் சடங்குகள் செய்தலே கிரியை வழியாகும். திருஞான சம்பந்தர் கிரியை வழியில் தாமே மந்திரங்களைக் கூறி , தேவாரப் பதிகங்களைப் பாடினார் என்பதை பெரிய புராணம் [19] வாயிலாக அறிய முடிகிறது. இதனை திருமந்திரம் பாடிய திருமூலமும்[20] நாள்தோறும் இறைவனுக்கு வழிபாடு செய்வதே கிரியை வழிமுறை என்று கூறுகிறார்.

“சலம் பூபிவாகு தூபம் மறந்தறியேன்
தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உண்ணாமம் என் நாவில் மறந்தறியேன்”[21]

இப்பாடலின் வாயிலாக திருநாவுக்கரசர் , தமிழ் மரபுவழியாக நீர் , மலர், சாம்பிராணி புகை போன்றவற்றை கொண்டு தமிழில் தேவாரப் பதிகங்கள் பாடி இறைவனை வழிபடும் முறை இருந்ததை விளக்குகிறார்.

3. யோகம் சைவ நாற்பாதங்களில் மூன்றாவது படியாக கருதப்படும் யோக நெறி , புலன்களை கட்டுபடுத்தி, உயிர் இறையோடு ஒன்றி நிற்கும் தியானப் , யோகாசனம் போன்றவற்றிறைக் குறிக்கிறது. யோக நெறியில் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து மூவாயிரம் பாடல்களை தமிழ் மந்திரமாக தந்தருளிய திருமூல நாயனால் யோக நெறியில் எட்டு படிமுறைகளைப் பற்றி பாடுகிறார். இயமம் , நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய அட்டாங்க யோகமே, எட்டு படிநிலைகள் ஆகும்.

நம்பிஆரூரர் என அழைக்கப்படும் சுந்தரமூர்த்தி நாயனார் அவர்கள் , யோக நெறி வழிநின்று இறைநிலை அடைந்தார்.

ஞானம் சைவ நாற்பாதங்களில் நாலாவது படியாகக் கூறப்படுவது ஞானமாகும். கேட்டல் , சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்னும் நான்கு பகுதிகளைக் கொண்டது ஞானமாகும்.

திருஞானசம்பந்தர், மூன்று வயதில், சீர்காழி தோணியப்பர் சந்நிதி குலக்கரையில் உமையமை அளித்த ஞானப்பார்வை உண்டு. ஞானம் பெற்ற நிகழ்ச்சியை பெரிய புராணம் பதிவு செய்துள்ளது.

ஞானம் நெறியில் , இறைவனே குரு வடிவில் வந்து தீட்சை உபதேசம் செய்து ஞானத்தை அளித்து முத்தியை வழங்குவார் , இதற்கு எடுத்துக்காட்டாக திருவாசகம் அருளிய மணிவாசகப் பெருமான் விளக்குகிறார்.

19-ம் நூற்றாண்டில் , மனித நேயத்தோடு வாழ்ந்த திரு அருட்பிரகாச வள்ளலார் அவர்கள் திருஞானசம்பந்த பெருமானை குருவாக நினைத்து , மரணமிலாப் பெருவாழ்வு அடைந்தாரென அறியப்படுகிறது. - 22

நினைந்து நினைந்துணர்ந்து
நெகிழ்ந்து நெகிழ்ந்தன்பே
நிறைந்து நிறைந்தூற்றெழுங் கண்ணீரதனால் உடம்பு
நனைந்து நனைந்தருளமுதே – 23

முடிவுரை:

பெரிய புராணத்தில், சேக்கிழார், நாயன்மார்களின் பக்தி திறத்தை விளக்கும் போது, தர்மநெறி மாறாதவர்கள் என்ற கருத்தை முன்வைக்கின்றார். தர்மநெறி என்பது அறநெறியாகும். எனவே , நாயன்மார்களின் வாழ்வியல் அனைத்தும் அறநெறியில் நடத்தப்பட்டுள்ளன என்பது சேக்கிழாரின் பெரியபுராணம் வாயிலாக அறியமுடிகிறது.

“பக்தி என்ற சொல் உயிர் இறைவனிடத்தில் கொள்ளும் அன்பு என்ற பொருளுடையது. உணர்வுப்பூர்வமான அன்பின் மூலம் இறைவனை வழிபடுவதே பக்தி என்கிறார் சைவ சமய ஆய்வாளர் இராசமாணிக்கனார்.[24]

“மனிதன் தன்னுடைய முயற்சியில் வெற்றியடையவும், நன்னெறியில் நடப்பதற்கும், உலகியல் துன்பங்களிலிருந்து விடுபடவும் , முக்தியடையவும் பக்தி உறதுணைபுரிகின்றது என்கிறார் வெள்ளைவாரணர் - 25

**அடிக்குறிப்பு:**

1. பெரிய புராணம் - ஓர் ஆய்வு அ.ச.ஞானசம்பந்தம்

2. தண்டி அலங்காரம் - 89
3. திருத்தொண்ட தொகை – 11
4. திருக்கூட்டம் சிறப்பு - 4 (1,2)
5. திருக்கூட்டச் சிறப்பு - 7
6. திருக்கூட்டச் சிறப்பு – 7
7. திருக்குறள் - 382 (பொருட்பால், அரசியல், இறைமாட்சி
8. திருமுறை - (4-2-1) தேவாரம் 4-ம் திருமுறை
9. ஆறாம் திருமுறை - திருநாவுக்கரசர் - 98
10. திருக்கூட்டச் சிறப்பு - 3 (1)
11. திருக்கூட்டச் சிறப்பு - 5 (3)
12. திருக் கூட்டச் சிறப்பு - 8 (1)
13. திருக்கூட்டச் சிறப்பு - 8 (2)
14. திருமூலரின் திருமந்திரம் பாடல் எண் 1857
15. திருமூலரின் திருமந்திரம் பாடல் எண் 270
16. திருக்குறள் அதிகாரம் குறள் எண்
17. உற்று நோக்கல் - கல்வி உளவியல் - ஒருவனின் நடத்தையை அளந்தறியப் பயன்படுத்து உளவியல் முறை அழக்கப்பா பல்கலைக்கழக கல்வி உளவியல் பாடம்.
18. சேக்கிழாரியின் பெரிய புராணம் – 12 : 25 : 12
19. சேக்கிழாரின் பெரிய புராணம் - 12 : 28 : 195
20. திருமூலரின் திருமந்திரப் பாடல் – 10 : 5 : 5
21. திருநாவுக்கரசர் தேவாரப் பாடல் – 4 : 1 : 6
22. வள்ளலாரின் திருவருட்பா (1981 : 94)
23. வள்ளலாரின் ஞானசரியை பாடல் எண் - 1
24. இராசமாணிக்கனார் - (2008 112)
25. வெள்ளைவாரணன் - (1994 67)